மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரியிலிருந்து விருதுநகர் வழியாகச் செல்கிற பஸ்களை, சிவகாசி வழியாகச் செல்லும்படி அமைச்சர் அவர்கள் ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி என்பது தனியாக விருதுநகரிலிருந்து உள்ளே வரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. அதே வழியாக வருமானால் உடனடியாக இயக்குவதற்கு அரசு நாளையே நடவடிக்கை மேற்கொள்ளும். இருந்தாலும் கூட உறுப்பினரின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டு, 300-க்கும் மேற்பட்டவர்கள் நாள்தோறும் பெங்களூருக்குப் பயணம் செய்கிறார்கள் என்ற கோரிக்கையை அரசு பரசீலித்து மிக விரைவாக கர்நாடக அரசோடு பேசி இங்கேயிருந்து இயக்குவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

148—

கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை வழி செல்லும் சாலையை மாநில முதன்மை நெடுஞ்சாலையாக உயர்த்துதல்.

* **16535-திரு சி. இராமசுவாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் இருந்து திருவண்ணாமலை, சங்கராபுரம் வழியாக செல்லும் சாலையை மாநில முதன்மை நெடுஞ்சாலையாக் உயர்த்தித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

1994 ஜனவரி 4]

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரம்--மூங்கில் துறைப்பட்டு வழியாகத் திருவண்ணாமலை செல்லும் சாலை மிகவும் முக்கியச் சாலையாகும். மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலைக்குச் செல்லுகின்ற வாகனங்கள் அதிக அளவில் அந்தச் சாலை வழியாகத்தான் செல்லுகின்றன. எனவே, மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு, அந்தச் சாலையை அடுத்த நிதி ஆண்டிலாவது மாநில முதன்மைச் சாலையாக உயர்த்திட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை மொத்தம் 62.9 கி.மீ. நீளம் கொண்ட சாலை, இதிலே இரண்டு வழிப் பாதை 28 கி.மீ. இருக்கிறது. மீதம் உள்ள பகுதி ஒரு வழிப் பாதையாக இருக்கிறது. மொத்தமாக இந்தச் சாலையை மேம்படுத்தவேண்டும் என்றால் ஏறத்தாழ இரண்டு கோடியே ஐம்பத்தெட்டு இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. முதன்மைச் சாலையாக, மாற்றி நெடுஞ்சாலைத் துறையின் கீழே பராமரிப்பதற்கு தனிப்பட்ட அளவிலே இப்போது இருக்கின்ற நிதி ஆதாரங்களிலே இருந்து செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதற்காகத்தான் இதைத் தெரிவித்தேன். அந்தச் சர்க்கரை ஆலைப் பகுதியிலே அடிக்கடி நம்முடைய வாகனங்கள் செல்வதால் சாலை பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதை நானே பார்த்தேன். திருச்சியிலிருந்து போகும்போது நானும், போக்குவரத்துத் துறை அமைச்சரும் பார்த்தோம். அதற்கான ஒரு திட்டத்தைத் தயாரிக்கச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அதற்கான மதிப்பீடு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் நிதி ஆதாரங்களைப் பொறுத்து அதை எடுத்து நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்தேன். ஆகவே, வரும் காலங்களில் இருக்கின்ற நிதி நிலைக்கேற்ப பகுதி பகுதியாக - ஒரே நேரத்திலே செய்ய முடியாது - பகுதி பகுதியாக அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளிலே இந்த அரசு இறங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை மூங்கில்துறைப்பட்டில் மேற்படி ஆலை இருக்கிறது. அந்த ஆலைக்குக் கரும்பு ஏற்றிச் செல்லுகின்ற வாகனங்கள் அதிக அளவில் அந்த வழியாகத்தான் செல்வதால் சாலை பழுதடைகிறது. அதற்கு, இலாபத்தில் இயங்குகின்ற சர்க்கரை ஆலையே அந்தச் சாலையைச் செப்பனிட வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன். அப்படியில்லை என்றால் பாதி சாலையையாவது அரசு எடுத்து அடுத்த நிதி ஆண்டிலே செப்பனிட மாநில முதன்மை நெடுஞ் சாலையாக ஆக்க உத்தரவிடுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச் சாலையைப் பொறுத்தமட்டில், கரும்புச் சாலை என்று சொல்லப்படுகின்ற சாலைகளைப் பராமரிக்கின்ற பணிகளிலே சர்க்கரை ஆலைகளை நாம் ஈடுபடுத்தினாலும் கூட, பொதுவாக நெடுஞ்சாலைத் துறைக்கு கீழே உள்ள சாலைகளை நாம் அவர்களுக்குக் கொடுப்பது கிடையாது, அது நம்முடைய கன்ட்ரோலில்தான் இருக்கிறது, ஆகவே, இதற்குரிய நடவடிக்கையை நான் ஏற்கனவே தெரிவித்தது போல நாங்களே நேரிடையாகப் பார்த்திருக்கிறோம். அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பதிலே அரசு ஆய்வு செய்து வருகிறது. எந்த அளவுக்கு அவர்களிடமிருந்து நிதி ஆதாரங்களைப் பெறமுடியும் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் என்று சொன்னால் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணிகளை அவர்களுக்கு வழங்கினால் பின்னால் அவர்கள் கிளெம் செய்யக் கூடும், ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, இதற்குத் தகுந்த பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

149—

திருவட்டார் தொகுதியில் திற்பரப்பு அணையை உயர்த்துதல்.

*** 20259** — திரு. இரா. அப்பு நடேசன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் திற்பரப்பு அணையை 5 அடி உயரத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.